# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2201/2 - 2020 නොවැම්බර් මස 09 වැනි සඳුදා - 2020.11.09

*2201/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 94/47* (v)

***(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்***

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவினாலும், 21(2)(ஆ) என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைமூலம்-*

*(அ)* இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "பொலன்னறுவை சொலொமஸ்தான ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பு" என அழைக்கப்படும் காணிப் பிரதேசமானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

*(ஆ)* நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்ட "பொலன்னறுவை சொலொமஸ்தான ரஜமஹா விகாரை புனித இடப்பரப்புக்காக" உருவரைப் பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2020, நவெம்பர் 06.*

**அட்டவணை**

*பொலன்னறுவை சொலொமஸ்தான ரஜமஹா விகாரை புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள காணிப்பிரதேசம்*

*வடமத்திய மாகாணத்திலுள்ள பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தில் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மெத பத்துவின் சிறிய பிரிவினுள் இல. 153, பென்டி வெவ, இல. 155*A, *சிறிசங்கபோ பெதெஸ, இல. 198, லக்ஷ்ய உயன மற்றும் இல. 199, நிஸ்ஸங்கமல்லபுர கிராம அலுவலர் பிரிவினுள் பொலன்னறுவைக் கிராமத்தில் அமைந்துள்ளதும், 2020, செத்தெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்டு 3950 இல் கூறிடப்பட்டு* PO/TMK/2020/189 *ஆம் இலக்க நில அளவையாளர் தலைமையதிபதியின் படியெடுப்பில் குறித்துக்காட்டப்பட்டவாறு காணித்துண்டம் இல.* A *ஐக் கொண்டுள்ளதும், பரப்பளவில் 388 ஹெக்டேயர்களை (958 ஏக்கர், 3 றூட், 13 பேர்ச்) கொண்டதுமான அக்காணிப் பிரதேசம் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-*

*காணித்துண்டம் இல.* A :

*வடக்கு :* *தாங்கி ஒதுக்கிடமானது, வடக்கு நோக்கி 2 கி.மீ. தூரத்தில் தோட்டக் காணிகளுக்கு அண்மையிலும் ; தென்கிழக்கு நோக்கி ஏறத்தாழ 0.5 கி. மீ. தூரத்தில் துணைவீதி வழியாகவும், தெற்கு நோக்கி 0.2 கி. மீ. தூரத்தில் வீட்டுத் தோட்டக் காணிகளுக்கு அண்மையிலும், தென்கிழக்கு நோக்கி 0.6 கி. மீ. தூரத்தில் வீட்டுத் தோட்டக் காணிகளுக்கு அண்மையிலும், துணைவீதி வழியாக கிழக்கில் ஏறத்தாழ 0.4 கி. மீ. தூரத்திலுள்ளது ;*

*கிழக்கு :* *பிரதேச சபை வீதி வழியாகத் தெற்கு நோக்கி வீட்டுத் தோட்டங்களுக்கு அண்மையிலும், வீட்டுத் தோட்டக் காணிகளுக்கு அண்மையில் தெற்கு நோக்கி 2.4 கி. மீ. தூரத்திலும், கால்வாய் வழியாக (எக்க எல) தென்கிழக்கு நோக்கி 0.6 கி. மீ. தூரத்திலும், வீட்டுத் தோட்டக் காணிகளுக்கு அண்மையில் தென்கிழக்கு நோக்கி 1.4 கி. மீ. தூரத்திலும், தென்மேற்கு நோக்கி 1.4 கி. மீ. தூரத்திலும் ;*

*தெற்கு :* *கால்வாய் ஒன்று வழியாக (எக்க எல) தென்மேற்கு நோக்கி 1.4 கி. மீ. தூரத்தில் வீட்டுத் தோட்டங்களுக்கு அண்மையிலும், மேற்கில் 0.3 கி. மீ. நோக்கி தாங்கி ஒதுக்கிடம் வழியாகவும் ; அத்துடன்*

*மேற்கு :* *வீட்டுத் தோட்டக் காணிகளுக்கு அண்மையில் வடக்கு நோக்கி தாங்கி ஒதுக்கிடம் வழியாக ஏறத்தாழ 2.3 கி. மீ. தூரத்திலும், வீட்டுத் தோட்டக் காணிகளுக்கு அண்மையில் வடமேற்கு நோக்கி 0.2 கி. மீ. தூரத்தில் வீதி வழியாகவும், கிழக்கு நோக்கி ஏறத்தாழ 0.3 கி. மீ. தூரத்திலும், துணை வீதி வழியாக வடக்கு நோக்கியும் தாங்கி ஒதுக்கிடம் நோக்கியும் துணை வீதி வழியாகவும் 0.6 கி. மீ. தூரத்தில் வடக்கு நோக்கியும் தாங்கி ஒதுக்கிடம் நோக்கியும் 0.4 கி. மீ. தூரத்தில் துணை வீதி வழியாகவும், கிழக்கு நோக்கி 0.4 கி. மீ. தூரத்தில் துணை வீதி வழியாகவும், வீட்டுத் தோட்டங்களுக்கு அண்மையில் வடக்கு நோக்கி 2 கி. மீ. தூரத்திலும்.*

*வடமத்திய மாகாணத்திலுள்ள பொலன்னறுவை நிருவாக மாவட்டத்தில் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மெத பத்துவவின் சிறிய பிரிவினுள், இல. 167, பொத்குல் பெதெஸ கிராம அலுவலர் பிரிவினுள் தொப வெவக் கிராமத்தில் அமைந்துள்ளதும், 2020, செத்தெம்பர் 30 ஆந் தகதியிடப்பட்டதும் 3950 ஆம் இலக்கத்தில் கூறிடப்பட்டதும்* PO/TMK/2020/219 *ஆம் இலக்க நில அளவையாளர் தலைமையதிபதியின் படியெடுப்பில் குறித்துக்காட்டப்பட்டவாறு காணித்துண்டம்* B *ஐக் கொண்டுள்ளதும், பரப்பளவில் 11 ஹெக்டேயர்களை (27 ஏக்கர், 0 றூட், 29 பேர்ச்) கொண்டதுமான அக்காணிப் பிரதேசம் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :*

*காணித்துண்டம் இல.* B :

*வடக்கு :* *தாங்கி ஒதுக்கிடம், தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை அமைந்துள்ள காணி, வீட்டுத் தோட்டக் காணிகளின் வழியாகத் தென்கிழக்கு நோக்கி ஏறத்தாழ 0.3 கி. மீ., மாநகர சபை வீதி வழியாகத் தெற்கு நோக்கி ஏறத்தாழ 0.1 கி. மீ. ;*

*கிழக்கு :* *மாநகர சபை வீதி வழியாக வீட்டுத் தோட்டக் காணிகளிலிருந்து தென்கிழக்குத் திசை நோக்கி ஏறத்தாழ 0.2 கி. மீ. தெற்கு நோக்கி ஏறத்தாழ 0.4 கி. மீ. ;*

*தெற்கு :* *வீதி வழியாக, மேற்கு நோக்கி, ஏறத்தாழ 0.2 கி. மீ. தூரத்தில் விகாரைத் தோட்டத்துக்கு அண்மையில் வடமேற்கு நோக்கி ஏறத்தாழ 0.1 கி. மீ. ;*

*மேற்கு :* *வடக்கு நோக்கியும் தாங்கி ஒதுக்கிடம் நோக்கியும் 0.6 கி. மீ. தூரத்தில் வீதி வழியாகவும்.*

*11-278*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*